**சுருக்கம்**

சமூகநீதித் துறை – 2026-2027 ஆம் நிதியாண்டிற்கான - '**மண்ணின் மகள்**' என்ற திட்டத்தை செயல்படுத்துவதற்கான ஒப்பளிப்பு மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**சமூக நீதித் (சிஉ_தி) துறை**

**அரசாணை (நிலை) எண். 80** **நாள்:16.10.2026**

**பராபவ, புரட்டாசி 29 -ஆம் நாள்**

**திருவள்ளுவர் ஆண்டு-2057**

**படிக்கப்பட்டது:-**

1. அரசணை (நிலை) எண்.38, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள்:06.07.2026.
2. மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை-18 அவர்களின் கடித நக எண். ஜி1/524/2026, நாள்.08.09.2026.

**ஆணை:-**

2026-2027 ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு-செலவு திட்ட உரையில் மாண்புமிகு அமைச்சர் (நிதி, திட்டம் மற்றும் வளர்ச்சி) அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டது:-

"ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின பெண் விவசாயத் தொழிலாளர்களை நில உரிமையாளர்களாக மாற்றும் நோக்குடன், "**மண்ணின் மகள்**" திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு விவசாயம் செய்திடத் தேவையான நவீன தொழில்நுட்பப் பயிற்சி வழங்கப்படும். திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் இத்திட்டத்திற்கு 20 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது".

2. மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தினை செயல்படுத்திட ரூ.20,00,00,000/- நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட தாட்கோ, மேலாண்மை இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமாக பரிசீலித்து "மண்ணின் மகள்" திட்டத்தினை செயல்படுத்த இணைப்பில் உள்ள வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றுமாறு மேலாண்மை இயக்குநர் தாட்கோ அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

4. மேலும், இத்திட்டத்திற்கான தகுதி வாய்ந்த பயனாளர்களை தெரிவு செய்யுமாறும் உரிய பதிவேடுகளை பராமரிக்குமாறும் தாட்கோ மேலாண்மை இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. மேலும் வேளாண்மை உழவர் நலத்துறை, குறு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, எரிசக்தித்துறை போன்ற துறைகளில் செயல்படுத்தப்படும் விவசாயம் சார்ந்த நலத்திட்டங்களின் பயன்களை பெறுவதற்கு தேவையான வழிகாட்டுதல் மற்றும் தொடர் ஆலோசனை வழங்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**டாக்டர். என்.சுப்பையன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
இயக்குநர், (முகூபொ) ஆதிதிராவிடர் நலம், சென்னை- 600 005.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை- 600 005.
மேலாண்மை இயக்குநர், தாட்கோ, சென்னை -600 018.
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்
(இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், வழியாக)
அனைத்து திட்ட அலுவலர்கள் (இயக்குநர், பழங்குடியினர் நலம் வழியாக)
அனைத்து மாவட்ட மேலாளர்கள், (மேலாண்மை இயக்குநர் தாட்கோ, வழியாக)
மாநில கணக்காய்வுத் தலைவர், சென்னை - 600 009/18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை– 600 005/8/9
மாவட்ட திட்ட அலுவலர், ( பழங்குடியினர் நலம்)
நகல்:-
வேளாண்மை உழவர் நலத்துறை, சென்னை-600 009.
குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை, சென்னை-600 009.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை-600 009.
கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-600 009.
எரிசக்திதுறை, சென்னை-600 009.
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-600 009.
மாண்புமிகு சமூக நீதித்துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை -600 009.
நிதி (ஆதி(ம)பந)/ வரவு – செலவு (பொது-I /II / வ.வ-I) த்துறை , சென்னை -600 009.
சமூக நீதித்துறை செயலாளரின் தனிச் செயலர், சென்னை-600 009.
சமூகநீதி (அநமு -1/ ஆதிந -5 / ப.மே 1 ) த்துறை, சென்னை-600 009.
இருப்புக் கோப்பு /உதிரி நகல்கள்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

ஏ. சந்திரசேகரன் 16/10/2026

**பிரிவு அலுவலர்**

16/10/21

## இணைப்பு

## அரசாணை (நிலை) எண். 80, சமூகநீதி(சிஉ_தி)த் துறை, நாள். 16 .10.2026

## மண்ணின் மகள் திட்டத்திற்கான வழிகாட்டு நெறிமுறைகள்

"மண்ணின் மகள் திட்டம்" என்ற விவசாய நிலமற்ற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மகளிரை நில உடைமையாளர்களாக உயர்த்தும் பொருட்டு செயல்படுத்துவதற்கான வழிமுறைகள் பின்வருமாறு:-

**தகுதிகள்**

1. ஆதிதிராவிடர்/பழங்குடியினர் இனத்தை சேர்ந்த மகளிராக இருக்க வேண்டும்.
2. மகளிர் இல்லாத குடும்பங்களில் கணவர் அல்லது ஆண் வாரிசுதாரருக்கு வழங்கப்படும்.
3. 18-55 வயதிற்குள் இருக்க வேண்டும்.
4. குடும்ப ஆண்டு வருமானம் ரூ.3.00 இலட்சத்திற்குள் இருக்க வேண்டும்.

**நிபந்தனைகள்**

- வாங்க உத்தேசித்துள்ள நிலத்தை விண்ணப்பதாரரே தெரிவு செய்ய வேண்டும்.
- நிலம் விற்பனை செய்பவர் ஆதிதிராவிடர் / பழங்குடியினர் அல்லாத பிற இனத்தைச் சார்ந்தவராக இருக்க வேண்டும்.
- அந்நிலம் கடந்த 5 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்த நபரின் பெயரில் பதிவு செய்திருக்க கூடாது.
- இத்திட்டத்தில் தாட்கோ இணையதளத்தில் விண்ணப்பிக்கும் பொழுது வங்கி கடன் (அல்லது) சொந்த பங்களிப்புடன் மானியம் பெற விண்ணப்பிக்கலாம்.
- அதிகபட்சமாக 2.5 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5.00 ஏக்கர் புன்செய் நிலம் வாங்கலாம்.
- இத்திட்டத்தின் மூலம் விவசாய நிலம் வாங்க நிலத்தின் சந்தை மதிப்பு / நிலத்தின் அரசு வழிகாட்டி மதிப்பில் எது குறைவோ அதனை திட்ட மதிப்பீடாக கணக்கிட்டு அதில் 50% அல்லது அதிகபட்சமாக ரூ.5.00 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.
- இத்திட்டத்தின் கீழ் வாங்கப்படும் நிலங்களுக்கு 100% முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்தில் விலக்கு அளிக்கப்படும்.
- வாங்கப்படும் நிலத்தினை பயனாளி 10 வருடங்களுக்கு விற்பனை செய்யக் கூடாது.

**சொத்து உருவாக்கத்தை உறுதி செய்தல்**

1. நிலம் பத்திரப்பதிவு செய்யப்படும் போது தாட்கோ, மாவட்ட மேலாளர்கள், சார்பதிவாளர் அலுவலகங்களில் தெரிவித்து அந்நிலத்திற்கு 10 ஆண்டுகளுக்கு விற்பனை செய்யாதவாறு வில்லங்கம் (Lien) ஏற்படுத்த வேண்டும்.

2. தாட்கோ, மாவட்ட மேலாளர்கள், மானியத் தொகை விடுவித்த 15 நாட்களில் விண்ணப்பதாரர் பெயரில் நிலம் பதிவு செய்யப்பட்டதையும், நிலத்திற்கு 10 ஆண்டுகளுக்கு வில்லங்கம் ஏற்படுத்தப்பட்டதையும் உறுதி செய்து சொத்து உருவாக்கப்பட்ட ஆவணங்களுடன் வில்லங்க சான்றினையும் (Lien Document) இத்திட்டத்திற்கான, தாட்கோ இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

**//உண்மைநகல்//**

**பிரிவு அலுவலர்**